# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று தரமதிப்பீட்டில் A+ தகுதி பெற்றது)

நாள் : 12.05.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக 33-வது ஆண்டு தோற்றுவிப்பு நாள் விழா மற்றும் அலுவலர்கள் நாள் விழா இன்று (12-5-2017) கொண்டாடப்பட்டது.



அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றுகையில், அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் A+ தகுதியை அடைந்ததற்கு இப்பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த முன்னாள் துணைவேந்தர்கள், பதிவாளர்கள் மற்றும் பிற அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோரின் பங்களிப்பும் முக்கியமானது என்றார். கடந்த இரண்டு ஆண்டுகளில் அழகப்பா பல்கலைக்கழகம் சிறந்த வளர்ச்சியை கண்டுள்ளது. அதற்கு முக்கிய காரணம் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், கடின உழைப்புமே காரணம் என்றார். அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்து பணியாற்றும் பண்பு (work culture) மிகச் சிறந்து விளங்குகிறது. பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த A+ தகுதிக்கு தகுதியானவர்கள் நாம் என்பதை தொடர்ந்து நிரூபித்துக் கொண்டே இருக்க வேண்டும். மேலும், A+ தகுதி பெற்ற பல்கலைக்கழகத்தில் பணிபுரியக்கூடிய வாய்ப்பு கிடைத்ததற்கு நாம் பெருமைபட வேண்டும். ஆசிரியர்கள், அலுவலர்கள் அதிகமாக உழைத்திருக்கிறார்கள். அதற்கு மாணவர்களும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். அதனாலேயே இந்த வெற்றியை நாம் கண்டிருக்கிறோம் என்றார்.

அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் பதிவாளர் முனைவர் ஆர். தண்டபாணி தமது சிறப்புரையில், 1985-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அழகப்பா பல்கலைக்கழகம் அபரீதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆரம்பம் முதல் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள், அலுவலர்கள் என்ற பாகுபாடு கிடையாது. இவர்களது ஒருங்கிணைந்த செயல்பாடுகளே வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டது என்று கூறலாம் என்றார். துணைவேந்தரின் சரியான திட்டமிடல், பணியாளர்களை ஒருங்கிணைக்கும் பாங்கு, மாணவர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம், அனைவரின் முக்கிய தேவைகளை அறிந்து உடனடியாக நிவர்த்தி செய்தல் ஆகியவையே அழகப்பா பல்கலைக்கழகம் A+ தகுதி பெற்றதற்கு முக்கிய காரணமாகும் என்றார். இத்தகைய சிறப்பு மிக்க பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெறுவது மாணவர்களுக்கு பெருமையளிக்கும் விசயம் என்றார்.

அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் அ. நாராயணமூர்த்தி, மேலாண்மைப் புல முதன்மையர் பேரா. வி. மாணிக்கவாசகம், முன்னாள் தேர்வாணையர் முனைவர் எஸ். நிலவழகன், முன்னாள் பதிவாளர் முனைவர் எ. செண்பகவல்லி, முன்னாள் தனி அலுவலர் முனைவர் எ. இராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பல்கலைக்கழக துணைப் பதிவாளர் திரு. எம். பாலசுப்பிரமணியன், உதவிப் பதிவாளர் திரு. எஸ். கோபால கிருஷ்ணன், கண்காணிப்பாளர் திரு. எம். முருகேசன் மற்றும் ஓய்வு பெற்ற துணைப் பதிவாளர் முனைவர் காளைராஜன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார். தேர்வாணையர் முனைவர் எச். குருமல்லேஷ் பிரபு நன்றி கூறினார்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)